# துணை விதிகள்

எல்.டீ.—பீ. 32/65

எல்.ஜீ.டீ.—ஜீ.ஐ. 9/40

## கிராமச் சபைகள் கட்டளைச் சட்டம்

1961 ன் 60 ம் இலக்கச் சட்டத்தால் திருத்தப்பட்ட (257 ம் அத்தியாயமான) கிராமச் சபைகள் கட்டளைச் சட்டத்தின் 42 ம் பிரிவின் கீழ் பொலன்னறுவை மாவட்டத்திலுள்ள மெதப்பற்று தெற்குக் கிராமப் பிரதேசத்தின் கிராமச் சபையால் ஆக்கப்பட்டு அப்பிரிவின் (3)ம் உட்பிரிவால் தமக்கு உரித்தாக்கப்பட்ட அதிகார பலத்தைக் கொண்டு **உள்ளூராட்சி அமைச்சரால் அங்கீகரிக்கப்பட்ட துணைவிதிகள்.**

ஈ. ஜீ. குணவர்தன,
நிரந்தரச் செயலாளர்,
**உள்ளூராட்சி அமைச்சு.**

கொழும்பு,
**1966 ம் ஆண்டு யூலை மீ 21 ந் உ.**

### துணைவிதி

1. கீழ்க்காணும் தொழில்கள் அபாயகரமான தொழில்களாகக் கருதப்பட வேண்டும் :—

கொப்பரு செய்தல்
கபூக், கிரவல் அல்லது கருங்கல் கிண்டியெடுத்தல்
தேங்காய்த் துருவல் செய்தல்
கொப்பரு சேகரித்துவைத்தல்
வைக்கோல் சேகரித்துவைத்தல்
காரீயம் பதம் பண்ணல் அல்லது சேகரித்துவைத்தல்
இயந்திரத்தினால் தேங்காயெண்ணெய் செய்தல்
தும்பு செய்தல் அல்லது சேகரித்துவைத்தல்
பருத்தி நூல் சேகரித்து வைத்தல்
வெட்டி மரக்காலை வைத்து நடத்தல்
ஆபரணங்கள் செய்தல்
பிராணவாயு கொண்டு உலை இயக்கும் எத்தொழிலும்
அச்சியந்திரசாலை வைத்து நடத்துதல்
தேயிலைத் தொழிற்சாலை வைத்து நடத்துதல்
உபகரணங் கொண்டு எண்ணெய் வடித்தல்
குழிவெட்டிச் சுண்ணக்கல் தோண்டுதல்
சுண்ணாம்பு சுடுதல் அல்லது சேகரித்து வைத்தல்
கொல் உலை வைத்தல்
வாயுப்பானங்கள் செய்தல்

2. கீழ்க்காணும் தொழில்கள் அருவருப்பான தொழில்களாகக் கருதப்படவேண்டும் :—

பாடம்பண்ணிய மீன் அல்லது கருவாடு சேகரித்து வைத்தல்
மொத்த விற்பனைக்காக பழுதடையத்தக்க உணவுப் பொருட்களையும் தானியங்களையும் சேகரித்து வைத்தல்
பசளை அல்லது செயற்கை உரம் செய்தல்
விறகிரி செய்தல்
சவர்க்காரம் செய்தல்
தோல் பதனிடுஞ்சாலை வைத்தல்
பாக்குப் பாடம் பண்ணல்
கழிவு இறைச்சி அல்லது இரத்தம் அவித்தல்
தோல் சேகரித்து வைத்தல்
எலும்பு சேகரித்துவைத்தல்
மீனுக்குப் பனிக்கட்டி இடுதல்
பலகை பாடம் பண்ணல்
" ஓட் " இரப்பர் அல்லது " கிரேப் " இரப்பர் புகையூட்டல் அல்லது செய்தல்
மூன்று மூடைகளுக்கு அதிகத் தொகையான செயற்கை உரம் அல்லது கோடா காய்ச்சுதல்
புகையிலை பதம் பண்ணலும் உலர்த்தலும்
சுருட்டுச் சுற்றுதல்
பாலைக்காய்ச்சுதல்
கள் சேகரிக்கும் நிலையம் வைத்தல்
பீடி சுற்றுதல்
தென்னைமட்டை ஊறப்போடும் காலை வைத்தல்

3. கீழ்க்காணும் தொழில்கள் அபாயகரமானவையாகவும் அருவருப்பானவையுமாகக் கருதப்பட வேண்டும் :—

தும்புக்குச் சாயமூட்டல்
செங்கற்கள் அல்லது ஓடுகள் சுடுதல்
பற்றறிகளுக்கு மின்னேற்றுதல்
சுண்ணாம்பு சுடுதல், பதம் பண்ணல், சேகரித்துவைத்தல் அல்லது தகர்த்தல்.

8-1297—26.8.66 ந் திகதிய வர்த்தமானி இல. 14,710

